ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

सदा मोहाटव्यां चरति युवतीनां कुचगिरौ
नटत्याशाशाखास्वटति झटिति स्वैरमभितः ।
कपालिन् भिक्षो मे हृदयकपिमत्यन्तचपलं
दृढं भक्त्या बद्ध्वा शिव भवदधीनं कुरु विभो ॥

शिवानन्दलहरी ।

விபோ, வியாபகராயும், கபாலத்தைத் தரிப்பவரும், பிக்ஷுகன்வேடம் பூண்டவருமான ஹே சிவ, நித்யசுகஸ்வரூபியாய் விளங்கும் ஹே பரமேசுவர, என் மனமென்கிற குரங்கானது, எப்பொழுதும் அக்ஞானமெனப் பெயர்வாய்ந்த கானகத்தில் ஸஞ்சரிக்கின்றது. யுவதிகளின் ஸ்தனங்களாகிற மலையில் நர்த்தனம் செய்கின்றது. விஷயங்களிலுள்ள ஆசை என்னும் கிளைகளில் தன்னிஷ்டம்போல் இங்குமங்கும் ஓடுகின்றது. இவ்விதம் மிகவும் சபலமுள்ள என் மனக்குரங்கை பக்தி என்கிற கயிற்றால் நன்குகட்டி உமக்கு ஸ்வாதீனமாய்ச் செய்துகொள்ளும்.

ஒரு பக்தர் தன் மனதை பகவானிடம் செல்லும்படி பலவாறாய் முயற்சித்தும் அது கட்டுப்படாமல் கண்டவிடங்களிலெல்லாம் மர்க்கடம்போல் போகின்றதெ்தென வருத்தப்பட்டு ஸ்ரீ உமாகாந்தனிடம் அதை இழுத்துக்கொள்ளும்படி அறிவிக்கிறார்.

ஹே பிரபோ, நீர் பிக்ஷுகராயிருக்கிறீர். பிச்சை வாங்குவதற்கும் கபாலமிருக்கிறது. இந்தக் குரங்கு இருந்தால் பலவித வேடிக்கை காட்டி அதிகமான பிக்ஷை வாங்கலாம். எவ்வித வேலையும் இது நன்றாய் செய்யும். ஆகையால் உமக்கும் உபகாரமாயிருப்பதால் இந்தக் கபியை அவசியம் தாங்கள் கிரகித்துக்கொள்ளவேண்டும் என்று பிரார்த்திக்கிறார். இதனால் மானிடர்களுக்கு பகவத்பக்தி அவசியமிருக்கவேண்டுமென்றும் போதிக்கப்படுகின்றது.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

குரோதன ௵ ஆடி ௴ ௧௨

கும்பகோணம் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்ய ஸ்வாமிகள் அவர்களால் நடத்தப்பட்ட

வியாஸபூஜா மஹோத்ஸவம்.

—)o(—

ஸ்ரீ மஹா ஸ்வாமிகளவர்கள் வருஷந்தோறும் நடத்திக் கொண்டுவரும் ஸ்ரீ வியாஸபூஜையை இந்த வருஷம் தங்கள் கிராமத்தில் நடக்கும்படி செய்து தாமும் மற்றும் சுற்றுப்பக்கங்களிலுள்ள கிராமவாசிகளான ஜனங்களும் அதைத்தரிசித்துப் பிறவிப் பயனைப் பெறவேண்டி இளையாத்தங்குடி கிராமவாஸிகளான மஹா ஜனங்கள் அனைவரும் ஸ்ரீ ஸ்வாமிகளவர்களிடம் சென்று பிரார்த்தனை செய்ய அவர்களும் அதற்கிணங்கி வியாஸபூஜைக்கு முதல்நாள் இந்த க்ஷேத்திரத்திற்கு விஜயமானார்கள். மறுதினம் காலையில் வழக்கம்போல் அவர்களுடைய நியமங்களை முடித்துக் கொண்டு இந்த க்ஷேத்திரத்தில் விளங்கும் 63-வது பரம்பரையாக இந்த பீடத்தில் அவதரித்து விசேஷ மகிமையுடன் பிரகாசித்து வந்தவர்களும் ஸ்ரீ மகாதேவேந்திர ஸரஸ்வதீ என்று திருநாமம் பூண்டவர்களுமான தமது ஸ்ரீ பரமேஷ்டி குருஸ்வாமிகளவர்கள் சன்னிதியையடைந்து விதிப்படி அவர்களை நன்கு ஆராதித்துப் பிறகு ஸ்ரீ சந்திரமௌளீசுவரர் ஆராதனத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்தானத்தை அடைந்தார்கள். அங்கு அந்த ஸமயம் அனுஷ்டிக்கவேண்டிய அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு 11 மணி சுமாருக்கு உலகெங்கும் புகழ்பெற்ற ஸ்ரீ

ஜகத்குரு பரமாசார்யர்களால் மிகவும் பக்தி சிரத்தையுடன் அனு ஷ்டிக்கப்படும் ஸ்ரீ வியாஸபூஜா வைபவத்தைத் தானும் கண்டு களிப்புறவேண்டுமென்று அர்ச்சகரூபமாய் இங்கு தோன்றியிருக் கிறரென்று பலராலும் கருதக்கூடிய கருணைக்கடலான ஸ்ரீ கை லாஸ நாதனுல் அலங்கரிக்கப்பட்ட ஆலயத்தில் சகல ஜனங்களும் சிரமமின்றி சுலபமாய்த் தரிசிப்பதற்குற்ற விஸ்தாரமாயுள்ள முன் மண்டபத்தில் தயாரிக்கப்பட்ட பூஜா ஸ்தானத்திற்கு விஜயஞ் செய்தார்கள். அந்த ஸ்தானம் மிகவும் பரிசுத்தமாயும் நன்கு அலங்கரிக்கப்பட்டு ஜனங்களின் மனதை இழுக்கக்கூடிய அழகு பொருந்தியதாகவும் விளங்கிற்று. பூஜா ஸ்தானத்தில் அமர்ந்த ஸ்ரீ ஜகத்குரு மஹா ஸ்வாமிகளை பக்தி சிரத்தையுடன் அங்கு வந் திருந்த ஆயிரக்கணக்கான ஜனங்களும் ஏககாலத்தில் வந்தனம் செய்தார்கள். பிறகு ஸ்ரீ காமாக்ஷியம்மன் தேவஸ்தானத் திலிருந்துவந்த பிரஸாதத்தைப் பெற்றுக்கொண்டு ஸ்ரீமகாஸ்வாமி கள் பூஜைக்கு உபக்கிரமம் செய்தார்கள். அப்பால் தஞ்சாவூர் புதுக்கோட்டை, உடையார்பாளையம், நங்கவரம், திருவானைக் காவல், மதுரை, ஆளுடையார்கோவில், இளையாத்தங்குடி முத லிய தேவஸ்தானம், ராஜஸ்தானம், பிரபுஸ்தானங்களிலிருந்துவந்த பிரஸாதத்தையும், பாதகாணிக்கையையும், பூஜாத் திரவியங்களை யும் வழக்கம்போல் யானையின் மேல்வைத்து ஆலயப் பிரதக்ஷிண பூர்வகமாய் ஸ்ரீ மகாஸ்வாமிகள் ஸன்னிதியில் ஸமர்ப்பணம் செய் தார்கள். ஸ்ரீ ஜகத்குரு ஸ்வாமிகள் தேவஸ்தானப் பிரஸாதங்களை கிரகித்துக்கொண்டார்கள். பூஜை நடக்கும் ஸமயத்தில் பாத பூஜைகளும் நடந்தன. மிகவும் விமரிசையாய் பூஜையை நடத்தி முடிந்தவுடன் அங்கு பூஜா தரிசனத்திற்காக வந்திருக்கும் ஜனங் களுக்குப் பிரஸாதமளித்தார்கள். உடனே ஸ்ரீ பரமேஷ்டிகுரு அதிஷ்டானம் சென்று அவர்களை தரிசனஞ்செய்து அவர்களை வந்தனுதிகளால் ஆராதித்து அவ்விடமிருந்து ஸ்ரீ சந்திரமௌளீச் வரஸ்வாமி ஸன்னிதியையடைந்து அங்குநடத்தவேண்டிய பூஜை யையும் வழக்கம்போல் நடத்தினுர்கள். பிறகு வந்திருந்த ஜனங்

ளுக்கு விசேஷ பக்ஷ்யபோஜ்யங்களுடன்கூடிய சந்தர்ப்பணையை நடத்தி அதிக ஆனந்தத்தை யுண்டுபண்ணி முதல்நாள் உத்ஸவம் வெகு விமரிசையாய் பூர்த்தியடைந்தது. மறுதினம் முதல் கிரமமாய் சாஸ்திரங்களிலும் வேதங்களிலும் பூர்ண பாண்டித்தியம் பெற்ற பண்டிதர்களின் வாக்கியார்த்தப் பிரஸங்கங்களும் அவரவர்களுக்குற்ற ஸன்மான மரியாதைகளும் நடந்துவருகின்றன. ஸ்ரீ மஹா ஸ்வாமிகளவர்களைத் தர்சித்து அனுக்கிரகப்பிரஸாதம் பெறுவதற்கு இச்சமயம் சிறந்த புண்யகாலமாகும். சுபம்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஹிந்துமத தர்மம்.

(கூஅசு-வது பக்கத்தொடர்ச்சி)

6 பிரகரணம்.

பிராமணன் அனுஷ்டிக்கவேண்டிய தினஸரிக் கடமைகள்.

நம்மைப் பொறுத்தமட்டில் நம்முடைய் பிராம்மண்யத்தைக் காப்பற்றவேண்டிய விஷயத்தில் நாம் அதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இனிமேலும் நாம் அதில் அலக்ஷியமாயிருந்தோமானல் அது நசித்துப்போக இடமுண்டாகும். அநேகரிடத்தில் முன்னமேயே அது தொலைந்துபோய்விட்டது. ஒவ்வொருவரும் கவலை எடுத்துக்கொண்டால்தான் அது காப்பாற்றப்படக்கூடும். பிராம்மணசமூகத்தின் நேர்மையானது அப்படிப் பிரயத்தினம் பண்ணுகிற ஒவ்வருவரவது ஜயத்தைப் பொறுத்து நிற்கின்றது. அதற்கு ஒழுங்குப்படுத்தப்பட்ட ஆலோசனை மகாநாடு கூடித்தான் ஆகவேண்டுமென்று நீங்கள் தப்பபிப்பிராயம் கொள்ளாதேயுங்கள். எந்த சமூகங்களும், ஸ்தாபனங்களும், ஆள்கூட்டபலத்தையும், அதைச்சேர்ந்தோரின் சரீரசம்பந்தமான வாழ்வையுமே கதியென நம்பி நிலைநிற்கின்றனவோ எந்த

சமூகங்களும் ஸ்தாபனங்களும் அழிவில்லாமல் சாச்வதமாய் நின்றுவரும் ஆத்மஉஜ்ஜீவனவழியை ஆதாரமாய்க் கைக்கொண்டிராமலும் ஒப்புக்கொள்ளாமலும் இருக்கின்றனவோ அப்பேர்ப்பட்ட சமூகஸ்தாபனங்களுக்கே தத்காலம் எங்கு பார்த்தாலும் வழங்கும்மகாநாடுகூடும் பைத்தியம்பிடித்திருக்கட்டும். ஒவ்வொரு பிராமணனும் தனித்தனியே நித்ய நைமித்ய கர்மங்களினுடையவும், அவரவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் உபாஸனைகளுடையவுமான ஆசாரங்களைப் பற்றின சாஸ்திரங்களின் அதிமுக்யமான வைகளையாவது நழுவவிடாமல் அனுஷ்டித்துவரும் பக்ஷத்தில் நம்முடைய பிராம்மண்யமும் நம் ஒவ்வொருவரிடத்திலும் ஸ்திரமாய் நிற்கும். நம்முடைய சமூகமும் பத்திரமாயும் அபாயத்திற்குள்ளாகாதபடியும் நிலைத்து நின்றுவரும். அப்படி முக்யமான கர்மங்களும், உபாஸனைகளும், ஆசாரங்களும் எவையெவையென்பதைச் சுளுவில் கண்டுபிடித்துக்கொள்ளலாம். நம்முடைய நித்ய கடமைகளுக்குள் பின் விவரிக்கப்படும் கடமைகளை நாம் கருத்தோடு ஜாக்கிரதையாய் நடத்திவந்தால் நம்முடைய பிராம்மண்யம் நாசமடையாதென்று மட்டும் இப்போது நான் உங்களுக்கு எடுத்துச்சொன்னால் போதுமென்று நினைக்கிறேன். அவைகள் யாவெனில்

(1) சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட பிரகாரம் அதிகாலையில் எழுந்திருப்பது; குறித்த காலங்களிலும், ஒரேவிதமான இடைவெளிகளிலும் தேக ஆரோக்யமான காரியங்களைச் செய்வது முதலிய வழக்கங்களை ஒழுங்காய் அனுசரிப்பது.

(2) சௌசம் ஸ்நானம் இவைகளைப்பற்றின விதிகளைப் போன்ற சரீரசம்பந்தமான ஆசாரத்திற்குரிய சாஸ்திரவிதிகளைக் கிரமமாய் அனுஷ்டிப்பதாலும் ஸ்பரிசத்தினாலும், நெருங்குவதினாலும், மற்ற விஷயங்களாலும் நேரிட்டிருக்கக்கூடிய தீண்டலை நிவர்த்தித்துக்கொள்வதாலாகிய தேகசுத்தியைச் செய்துகொள்வது வேண்டுமென்றோ அல்லது தெறியாமலோ மற்றவாகளால் செய்யப்படும்படி நாமே வரவழைத்துக்கொண்ட அல்லது மூடத்தனமாய் விடப்பட்ட தீட்டு அனாசாரம் அல்லது கெட்ட துராசாரத்திலிருந்து உண்டாகும் சில அனர்த்தமான அசுசிகளே

முற்றிலுமாவது அல்லது ஒருவாறாவது நம்முடைய இருக்கங்களில் நேரிடும் அனேக தொல்லையான சம்பவங்களுக்கு நேர் காரணங்களாயிருக்கின்றன என்று நான் சொல்வதை நீங்கள் நம்புங்கள். தேகாரோக்கிய சாஸ்திரமானது ஒருவன் தன்னைத்தானேயும் தனது சரீரத்தையும், தன்னைச் சுற்றுமுள்ள சூழல்களையும் அப்பேர்ப்பட்ட அனுசார துராசாரங்களின் சக்தியிலிருந்து காப்பாற்றிக்கொள்ளும் சாஸ்திரமேயாகும். ஹிந்துசாஸ்திர ஆசாரவிதிகளை அனுசரித்துத் தேகாரோக்கியத்தைப் பற்றின நம்முடைய கொள்கைகளை நம்மில் அநேகர் திருத்திக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

(3) நாம் ஸந்தியாவந்தனம் மாத்யான்னிகம் இவைகளை அவரவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற பிரகாரம் கட்டாயம் செய்ய வேண்டியது (ஒவ்வொரு தடவையிலும் முந்திப்பிந்தியுள்ள உப மந்திரதந்திரங்களுடன் பத்து காயத்திரிக்குக் குறையாமலாவது பண்ணினாலும் போதுமானது. இதனால் விட்டுவிடலாகாது என்பது கருத்து.)

(4) பிரம்மயக்ஞமும் அவச்யந்தான். இதுவரையில் உங்களில் சிலர் அதை நியமமாய்ச் செய்யாதிருக்கும்பக்ஷத்தில் அவர்கள் தங்கள் நித்யதர்மகர்மங்களில் அதையும் ஒன்றாய் உடனே சேர்த்துக்கொள்ளவேண்டும். நீங்கள் தேகசுத்தமாயிருக்கும் போது அந்த பிரம்மயக்ஞத்தைச் செய்யவேண்டும். உங்களுடைய காலை ஸந்தியாவந்தனம் பண்ணியானவுடனேயே அதில் தேவருஷி பிதுர்தர்ப்பணம் நீங்கலாக மற்றதைச் செய்துவிடலாம். தேவருஷி பிதுர்தர்ப்பணத்தை மட்டும் மாத்யான்னிகம் பண்ணியானபிறகு செய்துகொள்ளலாம்.

(5) நம்மில் அநேகருக்கு இப்போதிருக்கப்பட்ட சௌகரியங்களை உத்தேசித்து நாம் ஔபாஸனமந்திரங்களையும், பிர்ம்மசாரியாயிருக்கப்பட்டவர்கள் ஸமிதாதான மந்திரங்களையும் ஒவ்வொரு காலையிலும் சந்தியாவந்தனமான உடனேயே பார்க்காமல் ஒப்பித்தாவது விடவேண்டும். தனக்கு உரித்தான வேதத்தில் ஒரு பாகத்தையாவது அத்யயனம் செய்திருக்கவேண்டும்.

வேதமோதாத பிராமணன் நாலாவது தலைமுறையில் பிராம்மண்யத்தை இழந்துவிடுவானென்று ருஷிகளால் சொல்லப்பட்டிருக்கின்றது.

(6) மற்ற சிராத்தம், தர்ப்பணம், உபநயனஸம்ஸ்காரங்கள் உத்தரகிரியை முதலிய பிராமணர்களுக்குறிய எல்லாக்கர்மங்களையும் விதிப்படி பக்தி சிரத்தையோடு செய்துவரவேண்டும். மந்திரங்களைச் சரியாயுச்சரிக்க ஸம்ஸ்கிருதத்தைப் பால்யத்திலேயே படித்திருக்கவேண்டும். அப்படிப் படிக்காது தவறிப்போயிருப்பவர்களும் சுளுவில் கிரந்தஎழுத்தைக் கற்றுக்கொள்ளலாம். வாசிக்கத்தெரிந்தால் அதுவே சாஸ்திரங்களையும், மந்திரங்களையும் படித்துக் கற்றுக் கொள்ளத்தூண்டும் சாதனமாகும். சந்தியாவந்தனபரீக்ஷை மற்றஸ்கூல்பரீக்ஷைகளோடு வருஷத்தில் ஒருதரங்கூட நடத்தப்படாததினால் அதனை மறந்துபோன பையன்களும் இக்காலத்திலிருப்பார்கள். அப்படிப்பட்ட சிலருக்குக் கொஞ்சம் வயதுவரவே ஸந்தியாவந்தனத்தை முழுவதும் செய்யவேண்டும் என்று மனதில் அக்கரையும் ஆசையும் உண்டாகியும் மந்திரமே மறந்து போனதினாலும் புதிதாய்க் கற்றுக்கொள்ளப் பிறரைக்கேட்கவேண்டுமே என்றவெட்கத்தினாலும் மஹா வியஸனத்தோடு இருப்பவர்கள் கிரந்தாக்ஷரத்தைச் சுளுவாய்க் கற்றுக்கொண்டால் எல்லாப்புஸ்தகக்கடைகளிலும் விற்கப்படும் ஆன்னிக சந்தியாவந்தனம் முதலிய புஸ்தகங்களை வாங்கி ரகஸியமாய்க் கற்றுக்கொண்டு பிறகாவது சந்தியாவந்தனம் முதலிய கர்மாவை முழுதும் நல்ல உச்சரிப்போடு சொல்லித் தினம் தவறுமல் நடத்த வழியுண்டாகும். தனது மதத்திற்கு வேண்டிய ஸம்ஸ்கிருதப் படிப்பையும் தனக்குறியவேத அத்யயனத்தையும் ஐந்தாவது வயதுமுதல் பன்னிரண்டு வயதிற்குள்ளாகவே ஒருவாறுவது கற்றுக்கொண்டபிறகே அன்யதேசபாஷையைக் கைப்பற்றலாமேயொழிய ஹரி: ஓம் என்பதைக்கூடக் கற்றுக்கொள்ளாமல் இங்கிலீஷ் பள்ளிக்கூடத்திற்குகுழந்தைகளைக் கற்கவிடுவதை விட்டொழிக்கவேண்டும்.

7. உங்களது ஆகாரத்தை வகையிலும், சுத்தத்திலும், அளவிலும் தினந்தோறும் இத்தனை தாமென்பதிலும், சாஸ்திரத்தில்

சொல்லியிருப்பதை முற்றிலும் அனுசரித்து உட்கொள்ளுவதில் நீங்கள் விசேஷ ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டும். உங்களுடைய ஆகாரம் நாளடைவில் முழுவதும் ஸாத்விக வகையாய் மாறும்படி செய்யப்படவேண்டியது.

(8) நீங்கள் உங்களுடைய தோழர்களையும், லகுவாய்ப் படிப்பதற்கான புஸ்தகங்களையும் உங்களுடைய சரீரசம்பந்தமானதும் நீதிநெறிக்குரியனவாயுமுள்ள வழிகளையும் சரியானபடி பொருக்கிக்கொள்வதிலுங்கூட அதேமாதிரி ஜாக்கிரதை எடுத்துக்கொண்டு உங்களுடைய மேல்நோக்கிய அபிவிர்த்திக்கு இவைகளெல்லாம் உபகாரமாயிருக்கின்றனவா என்பதை நீங்கள் கவனித்துப் பார்த்துவரவேண்டும். அதற்கு விரோதமான புஸ்தக பாடங்களை ஒழிக்கவேண்டும்.

(9) விவாகமாகாத வாழ்க்கையின் கண்டிதமான பிர்மசரியத்திலும் சரி, அல்லது விவாகமான பிறகு கிரஹஸ்தவாழ்க்கைக்குத் தகுதியான பிர்மசரியத்திலும் சரி, பிர்மசரியமாகிய ஆண் பெண்ணிற்குரிய சரீரத்தினுடையவும் மனதினுடையவும் ஆன சுத்தத்தை நீங்கள் நன்ருய்க் காப்பாற்றுங்கள். நீங்கள் நியாய விரோதமான ஆண் பெண்ணிற்குரிய ஆசையூட்டும் மயக்கத்திற்கு ஒருக்காலும் இடங்கொடாதேயுங்கள். மனிதனை உய்விக்கும் உண்மையான காரியத்திற்காகவே மனிதத்தன்மையைக் கெடாமல் காப்பாற்றி வைத்துக்கொள்ளுங்கள். அப்படிச்செய்வதுதான் உங்களுடையவும் மானிடப் பிரகிருதிக்குரியவுமான ஆத்ம உன்னதியின் க்ஷேமத்திற்காக சாஸ்திரத்தில் விவரித்த தர்மக்கிரியையைச் சரியாய்ப் பூர்த்திசெய்யும் மார்க்கமாகும்.

(10) உங்களுடைய வெளித்தோற்றத்தில் எப்போதும் திட்டமான ஹிந்துவாய்க் காணப்படவேண்டுமேயொழிய நீங்கள் ஆரிய மார்க்கமல்லாத வீண் ஒயில்தனத்திற்கு ஒருகாலும் இரையாக நழுவக்கூடாது.

(11) மொத்தத்தில் ஸ்வதேசாபிமானம், கபடமின்மை, சத்தியம் சுத்தம், யோக்கியம், தைரியம், தாய், தந்தைகுரு, முத

விய பெரியோர்களுக்கு மரியாதை, வணக்கம் எல்லாரிடத்திலும் இரக்கமுள்ள அன்பு வேதசாஸ்திரங்களிலும், வேதசாஸ்திரமறிந்தவர்களுடைய வாக்கியத்திலும்நம்பிக்கை, வியவகாரத்திற்கிசைந்தநடத்தையில் மேற்கண்ட வாக்கியங்களிலும் சாஸ்திரங்களிலும் கண்டிதமான பற்றுதல் என்ற இவை இந்தவாழ்க்கையில் உங்களுக்கு வழிகாட்டும் பிரமாணங்களாய் விளங்கட்டும். இப்படிச் செய்தால் உங்களுடைய பிராம்மண்யம் தான் நிலைப்பது மாத்திரமேயில்லாமல் மிகவும் விஸ்தரித்த பரிமாணத்திற்கும் சீக்கிரம் விருத்தி ஹேதுவாகும். அந்தப் பிராம்மண்யமானது உங்களுடைய மேன்மைப் படுத்தும் தர்மத்தினுடையவும், கைதூக்கிவிடும் உபாஸனையினுடையவும் ஆன பலத்தை ஆதாரமாகக் கொண்டு பெரிய ஆத்மாக்களுடைய சேர்க்கையால் உங்களுடைய சக்தியானது பெருகி தத்வக்ஞான விஷயத்தில் இருட்டில் தடுமாறும் உங்களுடைய சகோதரர்களுக்கு உதவிசெய்யும் திறமையையும் உண்டாக்கும். நீங்கள் உங்களுடைய ஜனனமுறை உரிமையினாலேயே அப்படி அன்னியருக்கு உதவிசெய்ய லாயக்குள்ளவர்களாயிருக்கிறீர்கள். நீங்கள் தர்மமார்க்கத்தை அனுஷ்டிப்பதில் கொஞ்சம் உற்சாகமெடுத்துக் கொண்டால், வேதங்கள் மூலமாய் வெளிவரும் தத்வக்ஞானத்தைச் சுளுவாய்க் கைப்பற்றத்தக்க எல்லா வழிகளும் புலனாகும். சரியான மார்க்கத்தில் நீங்கள் மட்டும் அக்கரைப்பட்டுப் பிரவர்த்தித்தீர்களானால் கட்டாயம் நீங்கள் முன்னுக்கு வரலாம். எல்லையில்லாத் ஞானத்திற்கும், சூக்ஷ்மபுத்திக்கும் பேர்போனவல்லமை மிகுந்த பூர்வீக ரிஷிகளுடைய பரம்பரையில் நீங்கள் நேராய் ஜனித்து வந்திருப்பவர்களென்பதை மறக்கக் கூடாது. எல்லா ஜீவராசிக்கும் உதவி செய்வதற்காகவே ஏற்பட்ட உண்மையான பிராமண வாழ்க்கையின் சிறந்த மார்க்கத்தில் என்னென்ன இடைஞ்சல்கள் எதிர் வந்தாலும் நீங்கள லக்ஷ்யம் செய்ய வேண்டாம். மற்றவர்களுடைய அறியாமையும்,தப்பபிப்பிராயமும் ஆகிய மேகமானது எவ்வளவு கறுத்திருண்டு வந்தாலும்கூட உங்களுடைய காயத்ரீ உபாஸனையாகிய வல்லமையுள்ள ஆத்ம ஞான மார்க்கமாகிய சூரிய ஜோதியின்முன் அவை நீடித்து வெகுநாள் நிற்கமட்டா.

(தொடரும்) ராவ்ஸாஹேப் எல். ஏ. ரேங்கஸாமிஅய்யர்.

ஓர் கண்டனக் கூட்டம்.

சித்திரைமீ 25வ மாலை சாந்தாச்ரமத்தில் காந்திநகர் பிராமணஸபையினுதரவில் ஓர்பொதுக்கூட்டம் பிரும்மஸ்ரீ சுப்ராம சாஸ்திரிகள் தலைமையில் கூடியது. அடியிற் கண்ட தீர்மானம் பிரஸங்கவர வெ. ஸோமதேவசர்மாவல் பிரேரிக்கப்பட்டு நிறைவேறியது.

1 சேர்மாதேவி குரு குலத்தில் பிராமணப் பிள்ளைகளை மற்றவர்களோடு ஸமபக்தி போஜனம் செய்விப்பது, வர்ண ஸங்கரத்திற்கு இடமாதலால் அதைக் கண்டிப்பதோடு இனி அப்படி செய்யாதவாறும் செய்தால் பிராம்ணர்கள் தங்கள்பிள்ளையை அங்கே அனுப்பாததோடு கொடுத்த பணத்தையும் திரும்பப் பெறவேண்டும்.

(2) தீண்டாமை விஷயமாக தற்காலத்தியவர் கூற்று சாஸ்திரவிருத்தமானதென்றும் சாஸ்திரத்தை திருத்திச்சிலபோலிபண்டிதர் கூறுவதற்காதாரமில்லையென்றும், பஞ்சமர்களுக்கு வேண்டிய ஜலவசதி ஆலயம் முதலியவைகளை அவர்களுக்கேற்றபடி அமைத்துசீர்திருத்துவது உசிதமென்றும், கண்டபடிஎவரும் சாஸ்திரத்தைத்திருத்திக்கூறக் கூடாதென்றும், இச்சபைகோறுகிறது.

(3) இத்தீர்மானம் எல்லா தலைவர்களுக்கும் பத்திரிகை மூலம் அனுப்ப அக்ராஸனருக்கு அதிகாரமிருக்கிறது.

தீ. ராமநாதன்.

சேர்மாதேவி குருகுலம்.

காலசக்ரம் சுழண்டு வரும்போது இரவும் பகலும் போல் ஒவ்வொரு பொருளும் இருளையும் பிரகாசத்தையும் அடைவது இயல்பே. நமது சாஸ்திர ஸித்தாந்தத்தின்படி கலியுகத்தில் வர்ணஸங்கரம் ஏற்படுவது நிச்சயமே. காலத்திற்கேற்றபடி சாஸ்திரங்களைக் கற்றவர்களே மாற்றிச் சொல்வது விந்தையேயாம். ஆ ! கலியின் பெருமைதானென்ன? நமது வர்ணாச்ரமாசாரங்களைக்கண்டு நமது முனிவர்களின் தீர்க்கபுத்தியை நினைத்து

நினைத்து சில மேனாட்டுப் புலவர்கள் ஆச்சரியப்படுகின்றனர். கூடுமானவரை கைப்பற்றவும் முயல் கின்றனர். நம்மவரின் சில ரோ ஏன் ? பலரோ வர்ணாச்ரமம் நமது முன்னேற்றத்தைத் தடுக்கும் தடைக்கல்லென நினைக்கின்றனர். தனது அல்ப புத்தியைக்கொண்டு ஆராய்ச்சி செய்து சிலதர்மங்களைஎதிர்க்கின்றனர்.

(घटानां निर्मातुः त्रिभुवनविधातुश्च कलहः)

பானைச் சட்டியைப் படைக்கும் குயவன் உலகத்தைப் படைக்கும் பிரம்மனைச் சண்டைக்கழைத்தது போல் நமது முனிவர்களை சில போலிப் பண்டிதர்களும் பண்டிதம்மன்யர்களும் சண்டைக்கழைக்கின்றனர்.

சாஸ்திரகந்தத்தையே முகராத சிலரும் தாராளமாகச் சாஸ்திரத்தில் வாயை வைக்கின்றனர். அந்தோ ? ஒரு சிலர் வேத காலத்தில் (ஏது ?) ஜாதியே கிடையாதென்பர். ஒரு சிலர் சண்டாள ஜாதியே வேதத்தில் கூறப்படவில்லையென்பார். ஒரு சிலர் திருஷ்டிதோஷம் கிடையாதென்பர். ஒரு சிலர் வேதமே தப்பென்பர். பிரகிருத விஷயத்தில் தவருதலாக " குரு குலம்' என்று பெயரிட்டு முற்றிலும் அதற்கு மாரானபடி நடந்து வருகிறார்கள். இங்ஙனமல்ல பெயரிடாமல் வேரேதேனும் (ஜாதியற்ற குலம் ஸங்காகுலம்)என்று பெயரிட்டிருந்தால் ஆரியர்மநம் புண்படாது.இக்குலத்தில் நடைபெறும் அசாஸ்திரீய விஷயத்தைப்பலரறிந்திருக்கலாம். இப்போது ஓர் மஹா பெரியசாஸ்திரியார் ஓர் ராஜிசெய்து திருஷ்டிதோஷமில்லையென ஏற்பாடு செய்தாராம்.

(उष्ट्राणां विवाहे तु गर्दभाः खलु गायकाः)

ஒட்டை கல்யாணத்திற்கு கர்த்தபர்காயகர் என்றபடி இக்குலத்தின் பாட்டிற்கேற்கதாளம் போடும் சாஸ்திரி கிடைப்பது கஷ்டமல்லவா ! உண்மை மதாபிமானிகள் ஏமாரமாட்டார்கள் என்பதற்கு உதாஹரணமாக இச்சங்காத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்யத் துணிந்து சில அப்பிராமணகனவான் முன் வந்ததும் பலர் எதிர்ப்பதுமேயாம். உண்மையாக சாஸ்திரமறியாதாருக்கு ஜாதிவிஷயமாக நமது ஆர்யதர்மம் உபபத்திராதிபர் அவர்கள் எழுதிவரும் விஷயங்களைக் காட்டி நல்வழிக்குக் கொண்டுவா நம்

யேயர் முயற்ச்சிக்கலாம். வீண்வாதம் செய்வோருக்கு ஸர்வேச்வரனே பதில் சொல்வார். இனி எந்த பிராமணனும் ஷெடிகுலத்தில் குழந்தைகளைச் சேர்த்து குலத்தைக் கெடுக்கலாகாது. அவ்வக்ரம குலத்திற்கு கொடுக்கும் ஒவ்வொரு தம்பிடியும்நம்மை கெடுக்கும் ஹாலாஹலத்தின் ஜ்வாலையாம்.

உண்மை குரு குலம்.

நமது ஜகதாசார்யாளான ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபதிகள் லோகாநுக்ரஹத்தின் பொருட்டு ஜம்புகேச்வரத்தில் ஓர் குருகுலத்தை ஏற்படுத்தியுள்ளார். பிரதிதினம் பிள்ளைகள் பஞ்சபஞ்ச உஷ:காலத்தில் எழுந்து ஸ்நான ஸந்தி ஸமிதாதானம் பிரும்மயக்ஞம் தண்டமௌஞ்சி, கிருஷ்ணாஜிநதாரணம் பிக்ஷாடநம் இவைகளை நடத்தி வேதசாஸ்திரங்களைக் கற்பதை ஒவ்வொரு பிராமணனும் தர்சித்தல் வெண்டும். அங்கு கிருதயுக தர்மம் நடைபெறுவதைப் பார்க்கலாம். உண்மை மதாபிமானிகளின் ஊக்கமும் ஸஹாயமுமிருந்தால் அதை ஓர் சர்வகலாசாலையாக்கலாம். சாஸ்திரீயமான எல்லாத் தொழிலும் கற்பிக்கலாம். இவ்வெண்ணம் ஸ்ரீ ஜகதாசாரியாள் நிர்மலஹிருதயத்தில் உதித்திருப்பதால் இன்றல்லது என்றேனும் நடந்தே தீரும். பிராமணர்கள் தங்கள் பிள்ளைகளை ஏன் தங்கள் ஜாதியை நாட்டை இஹபரவழியில் நல்லகதிக்குக்கொண்டுவரவேண்டுமானல் அக்கலி குலத்தில் சேராது ஒதுங்கி உண்மை குருகுலத்திற்குதவும்படி மிகப்பணிவுடன் வேண்டுகிறேன். ஸத்தர்மம் வாழ்க ! அஸத் ஒழிக !

ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா.

ரஸ மஞ்சரி.

——)o(——

'சுக்லாம்பரதரம்' கண்ணில் குட்டவேண்டுமாம்.

இந்தியர்களின் பரிசுத்தமான 'கல்வி'முறை, மேனாட்டு நாகரிக நிர்வாஹிகளால் சீரழிக்கப்பட்டு "குடி மூழ்கிப்போயிற்று!" என்று கூக்குரலிட்ட சில மேதாவிகள் இந்தியாவின் பலபாகங்

களிலும் "குருகுலம்" என்ற பெயரால் சில வித்யாலயங்கள் நிரு மித்து வருகின்றனர். அந்த முறையில் தமிழ்நாட்டிலே சேர்மா தேவியில் ஸ்ரீமான் வா. வெ. ஸு. ஐயர் என்ற கனவான் "தமிழ்க் குருகுலம்" என்ற வித்யாஸ்தாபனமொன்றை ஏற்படுத்தியிருக் கின்றார். இதன் பெயர் பாரத்வாஜ ஆச்ரமம் என்றும் வழங்கப்படு கின்றது. இதில் எல்லா வர்ணத்தினரும் சேர்க்கப்படுகின்றனர். தற்காலம் 18 மாணாக்கரிருக்கின்றனராம். ஹரித்வாரத்திலுள்ள ஆர்ய ஸமாஜத்தாரின் குருகுலம்போல் இதிலும் இந்திய மாண வருக்கு சகல கலைகளும் போதிக்கப்படுமாம். கல்வியில் புதிய ரீதியை அநுஸரித்து இந்தியர்களுக்குக் கண் திறந்துவிடவேண்டு மென்ற நன்னோக்கத்துடன் தொடங்கப்பெற்ற இவ்வித்யாலயத் தின் ஆரம்ப தசையிலேயே பாலாரிஷ்டம் தோன்றிவிட்டதை நினைக்க எவரும் வருந்துவர்! வித்யாலயத்தின் உத்தேசம்போல் சில மாணாக்கர்கூட நிறைந்த கல்வியோடு வெளிவராத நிலையில் சில பிராஹ்மணத்வேஷிகள் முன்வந்து 'ஸமபங்க்தி போஜநம்' என்ற வாதத்தைக் கிளப்பிவிட்டது, "சுக்லாம்பரதரம்..." தொட ங்கும்போதே கண்ணில் குட்டிக்கொண்டதற்கு நிகரல்லவா? ஒரே மேஜையில் உணவு உட்கொள்ளும் பாக்கியத்தை ஜாதியினா லும் மதத்தினாலும் அந்தஸ்தினாலும் (பதவியினாலும்) உறவினாலும் அடைந்த மாஜி ஜெர்மன் தலைவரும், இங்கிலாந்தின் அதிபதியும் எவ்வளவு நட்புப் பாராட்டும்படி ஸம்பவித்தது என்ற ரகஸ்யம் மஹா யுத்தத்தில் விளங்கவில்லையா? உண்மை அவ்விதமிருந்தும், படித்த மேதாவிகள் "உணவு விஷயத்தில் மாத்திரம் ஸமஸ்வதந் திரத்திற்குப் போராடுதல்" வீண் வேலைதான்! மனஸ்தத்வ சாஸ் திர ஸித்தாந்தப்படி உணவு முதலிய சில காரியங்களில் "மறை வாக நடந்துகொள்ளுமாறு" இந்தியர்களின் ஆசார சாஸ்திரங் கள் வற்புறுத்துவது நலமா அன்றா என்பதை ஆயிரம் முறை யோசித்தல் நலம்!

எல்லோரும் நெல் உலர்த்தினால்
எலி வாலை உலர்த்துமாம்!

இந்தப் பழமொழிபோல் 10000 மாணாக்கர்களை "ஆயகலை அறுபத்துநான்கிலும்" பரிபூரணபாண்டித்யம் வாய்ந்தவர்களாக

ஸ்ருஷ்டித்துவிட்ட "ஸ்ரீ கண்வரது" குருகுலமும் குருகுலந்தான்! சிதம்பரத்தில் "தீண்டாமை விலக்குதல்" என்னும் பரமோக்ஷ ஸித்திக்காக 25 சிறுவரை ஜாதித்வேஷ விக்ரஹங்களாகப் படைத்து விடுவதும் குருகுலந்தான்!

குலபதியான ஸ்ரீகண்வமஹரிஷியின் ஆச்ரமத்தில் வளர்ந்து வித்யாஸம்பத்துப்பெற்று வெளிவந்த மகரிஷிகள் தமது அறிவினுல் இவ்வுலகத்தை ஆண்டனர்; அவர்களுடன் பழகிவாழும் பேறுபெற்ற 'பரதன்' இந்த புண்ய பூமியை ஆண்டான்! சிதம்பரம் நந்தனுர் கல்விக் கழகத்தின் ஆதரவில் நடைபெறும் திருவள்ளுவநாயனுர் குருகுலத்தினின்றும் எத்தகைய நந்தனுரும் நாயனுரும் வெளிவருவரோ நாமறியோம்!

இனியும் உறக்கமோ!
எழுமின்! விழுமின்! வேண்டும் வரம்பெற்று
உணர்த்துமின்!

அன்பிற்குரிய ப்ராஹ்மணோத்தமர்களே! ஸ்ரீமான்களே! கல்வியின் உத்தேசத்தை விபரீதமாக உணர்ந்து உலகின் நல்வாழ்வையழிக்கும் சிறியோர் முயற்சிகளை—விபரீதப்ரயத்னங்களை—அவற்ருல் ஹிந்துதர்மத்திற்கு விளையும் ஆபத்துக்களைக் கண்ணெடுத்துப் பாருங்கள்! வஸிஷ்டர், விசுவாமித்திரர், அகஸ்த்யர், வால்மீகி, ஸித்தநாகார் ஜுநர்போன்ற மஹாத்மாக்களையும், ஸ்ரீஜகத்குரு பரமாசார்யர்களைப்போன்ற அவதாரபுருஷர்களையும் படைத்த அந்த பாரததேசம் நாஸ்திக மதாபிமானிகளால் அடைகின்ற—அடையத்தயாராயிருக்கின்ற—கஷ்டநஷ்டங்களை வேறரக்களைந்து உண்மையான—பரிபூரண வித்யாசார்யர்களை வளர்த்துவிடும்படியார்த்த குருகுலத்தை—குருகுலங்களை—குலபதிகளை—ஸ்ருஷ்டி செய்யுங்கள்! அழியும் பொருளைப் பெரிதாகநினைத்து வாழ்க்கை நலம் அழிந்த காலம்போதாதா! ஆத்மஸம்பத்துபெரிதா? அற்பப் பொருள்பெரிதா? என்ற ஒருநூறு வருஷங்களாக நம்மால்—நமது (சென்ற) தலைமுறையால்—வெளிநோக்கத்தோடு சேகரிக்கப்பட்ட செல்வக்குவியல்உண்மையாகவே நமக்கு நன்மைசெய்ய

உதவுவதாயின், அதுவே நாம்பெற்ற செல்வத்திற்குப் பிரயோஜனமாயின், அந்தச் செல்வத்தின் தென்பை உதவியாகக்கொண்டு நாம் இன்று—இப்பொழுது—செய்ய வேண்டிய கடமை என்ன?

विद्या विवादाय धनं मदाय शक्तिः परा लोकनिपीडनाय।
खलस्य साधोर्विपरीतमेतद् दानाय मानाय च रक्षणाय ॥

நம்முடைய ஸமூஹத்தில் பிறந்த பண்டிதர்கள் தமது கல்வியை இனமாக வழங்கவேண்டும். ப்ராஹ்மணர்களின் செல்வம் ஏழை அந்தண வாலிபர்களின் மனக்குறையைத் தீர்ப்பதில் விநியோகமாக வேண்டும்! ப்ராஹ்மணசக்தியை—தபச்சக்தியை—லோகமெங்கும்பரவச்செய்து சகலமனிதர்களையும் தெய்வபக்தர்களாகச் செய்ய வேண்டும்! இந்த ச்லோகத்தில் சாமான்யமாக "வித்யை, தனம், சக்தி"—என்பவற்றை நல்லோரும் தீயோரும் இயற்கையாக விநியோகிக்கும் வழியே கூறப்பட்டதாயினும், இதன் பொருளைச் சிறிது விரிவாகச் சேர்த்துக்கொண்டு யான் எழுதுகின்றேன். நம்முடைய சக்தியை ஒருமுகப்படுத்தித் தீவ்ரமாக—தீவ்ரதரமாக—எல்லாவிதத்திலும் வேலை செய்தாலன்றி, நமக்கு இயற்கையான தபோ பலத்தையும் இழந்துவிட்ட நாம் இந்த நிலையில், இந்த தேசத்தில், இந்தப்போராட்டத்தில் இனி ஒரு நிமிஷமும் அமைதியாக வாழமுடியாது! பிரதிமாதத்திலும் ஆயிரக்கணக்கான கலாநிபுணர்களைத் தயாரித்து விடவேண்டும். பிரதி வருஷத்திலும் பல்லாயிரக்கணக்கான ஆயுர்வேத பண்டிதர்களை வெளிவரச் செய்யவேண்டும். நம்முடைய ஜ்யோதிர் வித்தையில் அஸஹாய சூரர்களான பண்டிதர்களை வெளிதேசத்தாரும் பிரமிக்கும்படி தயாரிக்கவேண்டும். ஹிந்துமந்த்ர சாஸ்திரபலத்தால் சனி மண்டலம்வரை சென்று திரும்பிய தசரதர் தோன்றிய நாடு இதன்றோ? காமதேநு காத்திருந்த வஸிஷ்டர் வாழ்ந்தநாடு வேறோ? பல்லாயிரக்கணக்கான சொத்தைச் செலவிட்டு பத்து, பதினைந்து வருஷம்வாசித்த கல்வி, கார்யத்தில் (வயிற்றுப்பிழைப்பிற்கு) உதவாது வீணுவதை உணர்ந்தும், வேறு வழிகளைக் கண்டு கொள்ளாமல் வாடுகின்ற—பந்தித்துக்கிடக்கின்ற—ப்ராஹ்மணஜாதி தமது அபாரமான புத்திஸாமர்த்திய பலத்தைத் தன்னு

டைய விடுதலைக்குக்கூட உபயோகித்துக்கொள்ள வேண்டாமா பிறசமூகத்தினர் பிராஹ்மணர்களைப்பற்றிக்குறைகூறும் பொழுது "பிராமணர் சுயகாரியப்புலிகள்" என்கின்றனர்! இந்த வார்த்தை நம் செவியில் பட்டவுடன் திரும்பிப் பார்த்தால்கூட பிராஹ்மண சமூகத்தில் சுயநலப்புலிகளிருப்பதாகக் காணவில்லை! இருந்தால் அவை தமது நன்மையிலேனும் கருத்தைச் செலவிடாதிருக்குமா! பெரியோர்களே! இதனை விரைவாகயோசித்து இனி நடக்க வேண்டிய வேலையை விரைவில் செய்யுங்கள்!

श्रद्धावाँल्लभते.

கொடிய களையாம் அதை எடுக்க வேண்டுமாம்.

ப்ராஹ்மத்வேஷத்தை ஆதரிக்கும் தமிழ்ப் பத்திரிகைகளில் குமரனும் ஒன்று! காரைக்குடியிலிருந்து வாரந்தோறும் வெளி வருகின்ற இப்பத்திரிகையில் சில நாளுக்கு முந்தி "கொடியகளை என்ற தலைப் பெயரிட்டு ஒரு வியாஸம் எழுதுகின்றார். மணிவா சகர் என்னும் பெயர் புணைந்த நிருபர் ச்லேஷையாக உபயோகிக் கப்பட்ட பதங்கள் அந்த வியாஸத்திலே மலிந்து கிடக்கின்றன. ப்ராஹ்மணரல்லாதார் என்ற இனியபயிரின் உணவு சாரத்தை 'பிராஹ்மணர்' களைகள் உறிந்து விடுகின்றன என்றும், அந்தக் கொழுத்தகளையைப் பிடிங்கியெறியவேண்டும் என்றும் வாகீச பக்தர் எழுதுகின்றார். பக்த சரித்திரத்தில் பிரஸித்திப்பெற்ற வரான மாணிக்யவாசகர் என்னும் மஹாபக்தர் பாண்டிய மன்ன னது மந்திரியாயிருந்து ராஜதனத்தையும் உதவியாகக்கொண்டு ஆளுடையார்கோயில் என்ற தேவாலயத்தைக்கட்டி முடித்த தாக அறிகிறோம். அவரது பக்தர் என்ற பெயர் தாங்கிக்கொண்டு குமரனில் எழுதுகின்ற இந்நிருபர் ப்ரஹ்மாலயமாகிய ப்ராஹ் மணஸமூஹத்தையும் (பிராமணஜாதியையும்) அதன் ஜீவ நாடியா கியஸ்ரீ ஜகத்குரு பீடங்களையும் வேரறக்களைய வேண்டுமென்றும் மூர்த்தந்ய சுவரத்தோடு கதறுகின்றார். இதைப் பற்றி அதிகம் எழுத விருப்பமில்லை.

ஸ்ரீ ஜாநகீஜாநி: